பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

15 10 2024 Tuesday 6.45 Am

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதால் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- பருவமழை நோய் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் ஆயிரம் இடங்களில் இன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.
- இந்தியா குறித்து கனடா பிரதமர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களையடுத்து, இந்திய தூதரக அதிகாரிகளை திரும்பப்பெறுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரி பாகங்களின் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளதற்கு மத்திய அரசுக்கு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.
- எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் சிறை பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 51 மீனவர்கள் நேற்றிரவு சென்னை வந்தடைந்தனர்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதால் தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், திருவாரூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, சிவகங்கை, சேலம், ஆகிய மாவட்டங்களில் கனமுதல், மிககனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

கனமழை எச்சரிக்கையையடுத்து, அப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.

சென்னையில் 12 பகுதிகளில் மழை காரணமாக அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுப்பதற்காகவும், மீட்புப்பணிகளுக்காகவும் சென்னை பெருநகர காவல் ஆணையர் உத்தரவின்பேரில் பேரிடர் மீட்புக்குழுக்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மீட்புக்குழுவுக்கும், மீட்புப்பணிகளுக்காக தலா ஒரு வாகனம் என 12 வாகனங்களும், ரப்பர் படகு, கயிறு உட்பட 21 மீட்பு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் மீட்புப்பணிகளை கண்காணிக்க 15 மண்டலங்களில் பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மழை தொடர்பான புகார்கள் மற்றும் மீட்புப்பணிகள் தொடர்பாக, பொதுமக்கள் 1 9 1 3 என்ற உதவி எண்ணில் தெரிவிக்கலாம் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

அத்துடன், கட்டுப்பாட்டு அறையில் உள்ள 0 4 4 – 2 5 6 1 9 2 0 4 மற்றும் 0 4 4 – 2 5 6 1 9 2 0 6 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டும் புகார் அளிக்கலாம் என்று கூறியுள்ளது.

chennaicorporation.gov.in என்ற இணையதளம், “நம்ம சென்னை” செயலி, ‘Greater Chennai Corporation Facebook, @chennaicorp என்ற இன்ஸ்ட்ராகிராம், @chennaicorp என்ற

X செயலி ஆகிய சமூக வலைதளங்கள் வாயிலாக தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது

தாம்பரம் மாநகராட்சி பகுதியில் மீட்புப்பணிகளுக்காக ஆறு படகுகளுடன் பத்து மீனவர்கள் கோவளத்தில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு தாம்பரம் ரயில்வே மைதானம், தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகம், அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள், மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்திற்கும் செயற்பொறியாளர், சிறப்பு அலுவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டு, கோட்ட அளவில் 15 பேர் அடங்கிய இரண்டு பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

மரம் வெட்டும் உபகரணங்கள், துணை மின் நிலையங்களில் டீசல் ஜெனரேட்டர் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மின் கம்பிகள் அறுந்துகிடக்கும் பகுதிகள் மற்றும் மின் மாற்றிகள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

சாலைகளில் மின் கம்பங்கள் அருகே தேங்கியிருக்கும் தண்ணீரில் நடப்பதையோ, வாகனத்தில் செல்வதையோ தவிர்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

மின் சேவைகள், தடைகள் குறித்த புகார்களுக்கு 9 4 9 8 7 9 4 9 8 4 என்ற எண்ணை தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பருவமழை நோய் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் ஆயிரம் இடங்களில் இன்று மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.

சென்னையில் இன்று நடைபெறவிருந்த மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான கல்வி மருத்துவ மதிப்பீட்டு முகாம் அடுத்த வாரம் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜெகடே அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, கன்னியாகுமரி மாவட்ட மலையோரப்பகுதிகளில் பெய்துவரும் கனமழையால், பேச்சிப்பாறை அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, அணையிலிருந்து வினாடிக்கு 250 கனஅடி உபரிநீர் கோதையாற்றில் வெளியேற்றப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பருவமழையை எதிர்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக அமைச்சர் திரு காந்தி கூறியுள்ளார்.

மழை காரணமாக, விழுப்புரம் மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

நேற்றிரவு சென்னையில் பரவலாக கனமழை பெய்தது.

<<<<<>>>>>

இந்தியா குறித்து கனடா பிரதமர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களையடுத்து, இந்திய தூதரக அதிகாரிகளை திரும்பப்பெறுவதென மத்திய அரசு முடிவு செய்துள்ளது

இதுதொடர்பாக, புதுதில்லியில் உள்ள கனடா நாட்டு தூதரக அதிகாரிகளை வெளியுறவு அமைச்சகம் அழைத்து விளக்கம் அளித்தது.

கனடாவில் உள்ள இந்திய தூதர் மற்றும் அதிகாரிகள் மீது குற்றம் சாட்டப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அவர்களுக்கான பாதுகாப்பில் நம்பிக்கை இல்லை என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையே, இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதர் Stewart Ross Wheeler உள்ளிட்ட ஆறு அதிகாரிகளை இம்மாதம் 19-ஆம் தேதிக்குள் வெளியேறுமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>

பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரி பாகங்களின் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளதற்கு மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயலுக்கு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்நடவடிக்கை மூலம் தமிழகத்தில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வலுப்பெறுவதுடன், சுமார் ஒரு லட்சம் பேரின் வேலைவாய்ப்புகள் பாதுகாக்கப்படும் என்று கூறியுள்ளார்.

அத்துடன் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் குறையும் என்று திரு மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கடந்த மாதம் சிறை பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட 51 மீனவர்கள் நேற்றிரவு கொழும்பில் இருந்து விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

புதுக்கோட்டை, மயிலாடுதுறை, ராமேஸ்வரம் பகுதிகளை சேர்ந்த இந்த மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் பேச்சுக்கள் நடத்தினர்.

அதைத்தொடர்ந்து, இலங்கை நீதிமன்றம் தமிழக மீனவர்களை விடுவித்து இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அவர்களை இந்திய அதிகாரிகள் நேற்று சென்னை அனுப்பிவைத்தனர்.

சென்னை விமான நிலையம் வந்தடைந்த மீனவர்கள் அனைவரும் அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருவதாக உணவு அமைச்சர் திரு சக்ரபாணி தெரிவித்துள்ளார்.

துவரம் பருப்பு விநியோகத்தில் தட்டுப்பாடு நிலவுவதாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்திக்கு மறுப்பு தெரிவித்து அவர் விளக்கம் அளித்துள்ளார்.

நேற்று வரை நியாயவிலைக்கடைகளில் இருப்பு உள்ள எட்டாயிரத்து 65 மெட்ரிக் டன் துவரம் பருப்பு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

கிடங்கில் இருப்பில் உள்ள ஐந்தாயிரத்து 115 மெட்ரிக் டன் துவரம் பருப்பு கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு வருவதாகவும் திரு சக்ரபாணி தாம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பொதுமக்கள் 21 பேர் உயிரிழந்தனர்.

----------

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று இஸ்லாமாபாத் புறப்படுகிறார்.

-----------------

ஜம்மு காஷ்மீரில் ஆட்சி அமைக்குமாறு, ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் திரு ஓமர் அப்துல்லாவிற்கு, துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா அழைப்பு விடுத்துள்ளார்.

--------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே சாலை விபத்தில் உயிரிழந்த தினபூமி நாளிதழின் உரிமையாளர் திரு மணிமாறன் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

-----------

விழுப்புரம் மாவட்டத்தில் நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கில் ஆறு லட்சம் பனை விதைகள் நடும் நிகழ்ச்சியை வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி தொடங்கிவைத்தார்.

--------------

மயிலாடுதுறை மாவட்ட மீனவ கிராமங்களில் போதைப்பொருட்கள் புழக்கம் உள்ளதாக மக்கள் புகார் அளித்துள்ளதையடுத்து, விளக்கம் அளிக்குமாறு கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும் என்று ஆட்சியர் திரு மகாபாரதி உத்தரவிட்டுள்ளார்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் வழங்கினார்.

----------------

தென்காசியில் பொதுமக்களிடையே நல்லுணர்வை ஏற்படுத்தும் வகையில் காவல்துறையினர் சார்பில் சைக்கிள் பேரணி நேற்று நடைபெற்றது.

-----------------

சென்னையில் உள்ள 19 மண்டலங்களில் வரும் 19-ஆம் தேதியன்று பொதுவிநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

---------------

உலகக்கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து அணி 54 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன்மூலம் இந்தியா அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

**<<<<<END>>>>>**